ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2125/23 - 2019 මැයි මස 28 වැනි අඟහරුවාදා - 2019.05.28
*2125/23 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி III - காணிகள்

### காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் அறிவித்தல்கள்

*நியதிச் சட்டமுறையான தீர்மான இலக்கம் : 4641*
*தனித்துவமான இலக்கம் : சீஓ/ 1181*

**1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்த சட்டம்**

*19 ஆம் பிரிவின் கீழான நியதிச் சட்ட முறையான தீர்மானம்*

*சீஓ/ 1181 என்னும் வெளிப்படுத்துகை தொடர்பில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1976 ஆம் ஆண்டு யூலை மாதம் 7 ஆந் திகதிய 220/ 9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2319 ஆம் இலக்க நியதிச் சட்டமுறையான தீர்மானம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு கொழும்பு 1, ஹேமாஸ் கட்டிடத்தைச் சேர்ந்த திரு. சிசில் அரசகுலரத்ன என்பவரின் மேற்பார்வையின்கீழ் திரு. லொய்ட் ஜோசப் ஐவோர் பர்னாந்து என்பவரினால் சட்டத்தின் 18 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட நியதிச் சட்டமுறையான வெளிப்படுத்துகையின் நியதிகளின்படியும், சட்டத்தின் 19 ஆம் பிரிவின் நியதிகளின்படி காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவுக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டும், நியதிச் சட்டமுறையான குத்தகை பெறுநரினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட காணிகளிலிருந்து கமத்தொழிற் காணியின் பாகத்தைக் குறித்துரைப்பதற்கு அவருக்கு அனுமதியளிக்கின்ற புதிய நியதிச் சட்டமுறையான தீர்மானமொன்று செய்யப்பட்டுள்ளது. சொல்லப்பட்ட குத்தகை பெறுநருக்கு அனுமதிக்கப்படும் காணியின் சொல்லப்பட்ட பாகம் இதற்கான அட்டவணையில் விவரிக்கப்படுகின்றது.*

*சட்டத்தரணி ஸ்ரீமேவன் டயஸ்,*
*தலைவர்,*
*காணிச் சீர்திருத்த ஆணைக்குழு.*

*காணிச் சீர்திருத்த ஆணைக்குழு,*
*இலக்கம் 475, கடுவெல வீதி,*
*பத்தரமுல்லை,*
*2019, மே 28.*

1A - PG 4533 — 27 (2019/05)
*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

*1. வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில் வாரியபொல வருமான வரி அலுவலகப் பிரிவில் வல்கம்பத்து கோறளை சிறு பிரிவில் வேஉடகம எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் வரையப்பட்ட இறுதிக் கிராம அளவைப் படத்தின் 692 ஆம் இலக்கத்தின் மேலதிக இலக்கம் 1 இல் காட்டப்பட்டுள்ளதும் வேஉடகம எஸ்டேட் என அழைக்கப்படுவதுமான காணியின் லொட் இலக்கம் 59 என அறியப்பட்ட 02 ஏக்கர் 1 றூட் 23 பேர்ச்சஸ் விஸ்தீரணம் கொண்ட காணிப்பகுதியும் அதன் கண்ணுள்ள தாவரங்களும் அவற்றின் பயனும் கட்டிடாதிகளுமாகும்.*

*2. வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில் வாரியபொல உதவி அரசாங்க அதிபர் பிரிவின் வல்கம்பத்து கோறளை சிறு பிரிவில் வேஉடகம எனும் கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் வரையப்பட்ட இறுதிக் கிராம அளவைப் படத்தின் 692 ஆம் இலக்கத்தின் மேலதிக இலக்கம் 12 இல் காட்டப்பட்டுள்ளதும் பஹல வெலே வத்த அல்லது வேஉடகம வத்த என அறியப்பட்ட ஏக்கர் 1 றூட் 2 பேர்ச்சஸ் 05.5 விஸ்தீரணம் கொண்ட லொட் இலக்கம் 153 என அறியப்பட்ட காணிப்பகுதியும் மற்றும் அதன் கண்ணுள்ள தாவரங்களும் அவற்றின் பயனும் கட்டிடாதிகளுமாகும்.*

*3. வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில் வாரியபொல உதவி அரசாங்க அதிபர் பிரிவின் வல்கம்பத்து கோறளை சிறு பிரிவில் வேஉடகம எனும் கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் வரையப்பட்ட இறுதிக் கிராம அளவைப் படத்தின் 692 ஆம் இலக்கத்தின் மேலதிக இலக்கம் 12 இல் காட்டப்பட்டுள்ளதும் ஹந்துகலகே வெவகாவ வத்த அல்லது வேஉடகம வத்த என அறியப்பட்ட ஏக்கர் 1 றூட் 3 பேர்ச்சஸ் 31.2 விஸ்தீரணம் கொண்ட லொட் இலக்கம் 152 என அறியப்பட்ட காணிப்பகுதியும் மற்றும் அதன் கண்ணுள்ள தாவரங்களும் அவற்றின் பயனும் கட்டிடாதிகளுமாகும்.*

*4. வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில் வாரியபொல உதவி அரசாங்க அதிபர் பிரிவின் வல்கம்பத்து கோறளை சிறு பிரிவில் வேஉடகம எனும் கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் வரையப்பட்ட இறுதிக் கிராம அளவைப் படத்தின் 692 ஆம் இலக்கத்தின் மேலதிக இலக்கம் 11 இல் காட்டப்பட்டுள்ள சியம்பலாகஹமுல வத்த அல்லது வேஉடகம வத்த என அறியப்பட்ட ஏக்கர் 13 றூட் 2 பேர்ச்சஸ் 19.9 விஸ்தீரணம் கொண்ட லொட் இலக்கம் 151 என அறியப்பட்ட காணிப்பகுதியும் மற்றும் அதன் கண்ணுள்ள தாவரங்களும் அவற்றின் பயனும் கட்டிடாதிகளுமாகும்.*

*5. வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தில் வாரியபொல உதவி அரசாங்க அதிபர் பிரிவின் வல்கம்பத்து கோறளை சிறு பிரிவில் கட்டுபொத்த எனும் கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் வரையப்பட்ட இறுதிக் கிராம அளவைப் படத்தின் 691 ஆம் இலக்கத்தின் மேலதிக இலக்கம் 09 இல் காட்டப்பட்டுள்ள கோங்கஹமுல வத்த கொனகெடி வலகாவ வத்த ஹினகலகாவ ஹேன அல்லது வேஉடகம வத்த என அறியப்பட்ட ஏக்கர் 23 றூட் 1 பேர்ச்சஸ் 37.6 விஸ்தீரணம் கொண்ட லொட் இலக்கம் 138 என அறியப்பட்ட காணிப்பகுதியும் மற்றும் அதன் கண்ணுள்ள தாவரங்களும் அவற்றின் பயனும் கட்டிடாதிகளுமாகும்.*

*06-261*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.